1297

உ

பரமபதி துணை

ஏரிசை நத்தமா நகரின் கண்

திருக் கோயில் கொண்டெழுந்தருளிய

ஸ்ரீ மாரியம்மன்

28 FEB 1?2

# தோத்திரப்பாமாலை.

இஃது

ஏரிசை யென் னும்பெயர் பெயருடைய

நத்தமா நகர்

மகா-ள-ள ஸ்ரீ வீரப்ப செட்டியார் குமாரர்

மகா-ள-ஸ்ரீ

வீரியப்பெருமாள் செட்டியாரவர்கள்

இயற்றியவை

டை யூர்

ஸ்ரீமான் ந. நா. நாகலிங்கம் செட்டியார்

அவர்கள் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

வீரப்ப செட்டியார் அவர்கள்

பொருளுதவி கொண்டு

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார் அவர்களது

மதுரை வடக்குமாசிவீதி

...மச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

...திப்பிக்கப் பெற்றது

1924 [0—2—0

Q25:41
N24
181966

உ

பரமபதி துணை.

ஏரிசை நத்தமா நகரின் கண்

திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

# ஸ்ரீ மாரியம்மன்

# தோத்திரப்பாமாலை.

இஃது

ஏரிசை யென்னுமியற் பெயருடைய

நத்தமா நகர்

மகா-ா-ா ஸ்ரீ வீரப்ப செட்டியார் குமாரர்

மகா-ா-ா ஸ்ரீ

வீரியப்பெருமாள் செட்டியா ரவர்கள்

இயற்றியதை

ஷை யூர்

ஸ்ரீமான் ந. நா. நாகலிங்கம் செட்டியார்

அவர்கள் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ

வீரப்பசெட்டியார் அவர்கள்

பொருளுதவி கொண்டு

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம. குருசாமிக் கோனார் அவர்களது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது

இதன்விலை] 1924 [0—2—0

26 FEB 1



மதுரை வித்வான்

## S. கலியாண சுந்தரம் பிள்ளை

அவர்களாலியற்றிய சிறப்புப்பாயிரம்

### அறுசீரடி யாசிரிய விருத்தம்

கற்றவர்த்தோர்க் குறைவிடமா மிராசைநகர் மகமாயி
நளினத் தாளிற்
குற்றமிலாத் தோத்திரப்பா மாலையியற் றினன்வணிகர்
குலகாம் பீரன்
சித்திரநேர் வடிவழகன் வீரப்ப வள்ளல்தவந்
திகழ்கு மாரன்
பத்திமிகுங் குணவீரி யப்பெருமாள் புவிபுகழும்
பாவல் லோனே.

181966

### வெண்பா

கன்ன னுடன்பிறந்த காளிமக மாயிபதம்
எண்ணியயத் தோத்திரப்பா வின்றுரைத்தான் - வண்ணமணி
மாடஞ்சூழ் கத்தநகர் வாழ்வீரி யப்பெருமாள்
நீடுமது ரக்கவிஞன் நேர்ந்து.

உ

தேவிசகாயம்.

ஏரிசை நத்தமா நகரின்கண்

திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

# ஸ்ரீ: மாரியம்மன்

# தோத்திரப் பாமாலை.

## விநாயகர் துதி—வெண்பா.

நன்மைமிகு மேரிசை நத்தம் வாழ் நாயகியாம்
நன்மமக மாயிபுகழ் நானிலமு—தன்மைபெறத்
தோத்திரப் பாமாலை சொல்லுதற்கு வந்தெனைநீ
காத் தருளுங் குஞ்சரமு கா.

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அத்திமா முகனே போற்றி ஆறுமா முகனே போற்றி
அத்தனே யருள்வாய் போற்றி யம்பிகைத் தாயே போற்றி
எத்தலத் தோரும் போற்றும் ஏரிசை நத்தம் வாழும்
மத்தக முபர்த்த கொங்கை மகமாயி பாதம் போற்றி (1)

திருமணி முத்தாற் றில்நற் றீர்த்தமு மாடி யென்றும்
மருவிலா மலரெ டுத்து மகமாயி பாதம் போற்றில்
அருளொடு பொருளுந் தந்து அறிவுள மக்க ளீய்ந்து
திருவருள் புரிந்து நாளும் தேவியுங் காத்தாள்வாளே (2)

நூல்

மந்தமா ருதக்காற் றாலே மலர்ந்திடு மலரெ டுத்து
அந்தமா யழகா யன்பா யர்ச்சிக்கும் ஆதி சைவர்
செந்தணல் வலக்கை கொண்டு செகத்துளோர் போற்றும் வேத
அந்தணர் குலங்கள் யாவு மன்புடன் காத்தாள் வாயே (3)

பரசிவ மாகி நின்ற பரஞ்சுடர் வடிவில் வந்த
வரமிகு சத்தி யுன்னை வந்தடி பணிய வந்த
பரசம யத்தோ ருக்கும் பாக்கியந் தந்து நாளும்
அரசர்கள்குடிக ளன்னை யன்புடன் காத்தாள் வாயே (4)

அங்கமா றுடையோ ரெல்லா மரசர்க ளஃதில் லாத
சிங்கம நாய்க்க னென்போ னீதியின் செங்கோ லோச்சி
சுந்ததி யிழுந்தா னென்று சாற்றினர் முதியோர் நீதிச்
சங்கம்வா ழிரசை மேவுஞ் சர்ச்சனர் தமைக்காப்பாயே (5)

மணிச்சிலம் போசை காட்டி மன்றுள்நின் றாடி முன்னந்
துணிவுட னாடி நின்று தொல்சபை பெற்று யுன்றன்
பணிவிடை செய்வ தற்குப் பண்புள்ள பத்த ரான
வணிகர்தங் குலத்தோ ருக்கு வளர்பொருள் கொடுத்தாள் வாயே (6)

வேறு

பாராளு கின்ற முடிமன்னர் போற்றும் பராசத்தியே
ஏராள மான உழவோர்கள் வாழு மிரசைநகர்
காராள ரான கட்டியங் காரக் கணக்கருக்கு
மாறாத செல்வமு மக்களுந் தந்து மகிழ்விப்பையே (7)

வேறு.

இப்புவி யிரசை யாண்ட விங்கம ணுய்க்க னென்போன்
ஒப்பிய நின்குலத்தி னுளிமிகு நன்மு கம்ம
தப்பாசு ராவுந் தர்க்கின் பறிவரு ளாண்மை மிக்க
ஒப்பிலா மகவும் வாழ்வுமுதவிநீ காத்தாள் வாயே (8)

பித்தனு ரிடத்தில் நின்று பெருமையாய் நடனஞ் செய்தாய்
நத்திய அறுமு கற்கு நல்வரம் அருளிச் செய்து
சத்திவேல் கொடுத்துச் சூரர் தன்கிளை சாய்ந்த தாயே
நத்தம்வாழ் குடிக டன்னை நாரணி காத்தாள் வாயே (9)

ஆலகா லத்தை யுண்ட அரனடித் தொண்ட ரான
மாலவன் றங்கை யேயுன் மனமது யிரங்கி யென்பாற்
காலன்வா ராமல் நாளுங் காப்பதுடன் கடமை யிந்த
ஞாலமீ தென்னை நாளும் நாரணி காத்தாள் வாயே (10)

மயிடசங் கரி வீரி மகேஸ்வரி மாரி முத்தே
கொய்மலர் கொண்டு வந்துன் குரைசழல்பணிந்தோ ருக்குக்
கைதனிற் பொருளுந் தந்து கலைக்ஞான மருளிச் செய்து
தைரியத் துடன்வா ணுளுந் தயாபரி தந்தாள் வாயே (11)

அத்தியை யுரித்துப் போற்றும் அத்தனு ரிடத்தில் வாழுஞ்
சத்திசங் கரி தாயே சாம்பவி மாரி முத்தே
நத்தமா நகரில் வாழும் நலமுள அடிய வர்க்குப்
புத்திரப் பேறுந் தந்து புகழ்செல்வம் அருளுவாயே (12)

முத்திநீ முத்திக் கான முதல்விநீ முதலா யுள்ள
சத்திநீ சத்திக் கான தலைவியென் சத்ரு தன்னைக்
குத்திநீ குடலை வாங்கிக் குலாவியே மாலை போட
இத்தலம் நடித்து வாழு மிரசைநா யகியாள் வாயே (13)

நித்திய மாகி யெங்கும் நிரந்தர மான சோதி
வித்தகி விமலி சூலி விளங்குசுந் தரியே யுன்னை
யெத்திசை யோர்கொண் டாடு மிரசைவாழ் குடிக ளுக்குத்
தொத்துநோய் வராமல் நாளுந் தொண்டரைக் காத்தாள்வாயே (14)

பத்திர புஷ்பங் கொண்டு பாதபங் கயம்போற் றாது
நித்தமு மலைந்து கெட்ட நிர்மூட மிகுத்துப் பஞ்ச
மித்திர பேதங் கற்று மிடியினால் மெலிந் து நொந்து
சத்தியில் லாது நின்ற சழக்கனைக் காத்தாள் வாயே (15)

எத்திய மாதர் தங்க ளிருவிழி வலையிற் சிக்கிப்
புத்தியில் லாதுயானும் பொழுதினைப் போக்கி விட்டேன்
குத்திரங் கோளும் நீக்கிக் குணமிலாக் கொலையு நீக்கி
உத்தம குணமுண் டாக்கி உத்தமீ காத்தாள் வாயே (16)

பெற்றதாய் நீயல் லாது பேருல கத்தில் வேறு
உற்றதா யுனையல் லாது உதவியிங் காரு மில்லை
சத்திய மாகச் சொன்னேன் சடாட்சரி நீயே சாக்ஷி
பத்தினித்தாயேயென்னைப்பாதுகாத்தருள்செய்வாயே (17)

முத்தர்கள் முனிவ ருன்றன் முண்டகத் தாளைப் போற்றி
சித்திகள் பெற்ற ரென்று செப்பினர் புலவர் முன்னம்
பத்தியா யுன்றன் பாதம் பணிந்துமே பாடு வோர்க்குப்
புத்திபொன் பூமி தந்து பூரணீ காத்தாள் வாயே (18)

அத்துவித ஞான யோக ரடிதனைப் பணிந்தி டாத
லுத்தர்க ளையங் கொண்டு லுத்தயேற் கொண்டு யானும்
பெத்தம்போ லலைந்து கெட்ட பேயனைப் பிள்ளை போலச்
சித்தமீதி ருத்தி யென்னை சிவகாமி காத்தாள் வாயே (19)

பைங்குனி மாதந்தோறும் பகர்செவ்வாய்க்கிழமை தன்னில்
திங்களசேர் கின்ற போது திருவிழா யேற்ப டுத்தி
மங்கள கோல மாக மாகம்பங் கொண்டு வந்து
தங்கமாங் கோவி லூன்றுந் தொண்டரைக் காத்தாள் வாயே (20)

விரதமா தவமி ருந்து வேண்டிய அடியா ரெல்லாங்
காரந்தமா மலைக்குச் சென்று கன்னிமார் தீர்த்த மாடிக்
காகநீர் சிரமேற் கொண்டு காற்றினுங் கடுமை யாக
விரைவுடன்வருவோர்க்கெல்லாம்வேண்டியவரமீவாயே(21)

அம்மனா ருணிக்கிச் சென்று அம்மனை வழிபா டேற்றிச்
செம்மன முள்ளோ ரெல்லாஞ் சேவடி பணிந்து நிற்க
அம்மையுன் மனதி ரங்கி யடியவ ருருவிற் சென்று
உம்மையாய்க்காப்பேனென்று ஓர்வரந் தந்தாள் வாயே(22)

வேடையால் மயங்கி நின்று வெம்பிடும் பயிர்க ளுக்குக்
கோடைகாலத்திற்பெய்யுங்குளிர்ச்சியாமழையைப்போலும்
பேடைமா மஞ்ஞை போலும் பேசிடுங் கிள்ளை போலுங்
கேடைய மேறி வந்து கிருபையாய்க் காத்தாள் வாயே (23)

மாதமும் மாரி பெய்யு மாவளஞ் சிறந்த நத்தம்
நூதன மாக வந்த நுட்பமாங் குடிக ளுக்கு
சாதகஞ் செய்யுந் தாயே சாம்பவி மாரி முத்தே
பூதவா கனமீ தேறி பூரணி காத்தாள் வாயே (24)

எங்குமுள் ளோர்கள் போற்று மிரசைமா நகரில் வாழும்
பங்கய முகத்தி னாளே பருவத ராச புத்ரீ
ஐங்கரன் வடுகன் வீர னறுமுக னையன் தாயே
சிங்கவா கனமீ தேறி சீர்பதந் தந்தாள் வாயே (25)

நன்மைய மான ஆடை நலமிகு பணிதி பூண்ட
மன்னர்கள் மற்று முள்ள மகாஜனக் கூட்டத் தோர்க்குப்
பன்னக சயனன் தங்கை பார்வதி மாரி முத்தே
அன்னவா கனமீ தேறி யருள்புரிந் தாட்கொள்வாயே (26)

சீர்மிகு சிறப்பு வாய்ந்த செகம்புக ழிரசை வாழும்
ஆர்நிறை யழகு வாய்ந்த அம்பிகே செங்கை யுள்ள
கார்நிறச் சூலபாச கபாலமு முடுக்கை கொண்டு
தேர்தனி லேறி வந்து தெரிசனங் கொடுத்தாள் வாயே (27)

அக்கினிப் பூவில் நின்று ஆடிடுமடியார்க் கெல்லாம்
பக்கமே நின்று காக்கும் பார்வதி மாரி முத்தே
எக்குலத் தோர்க ளுக்கு மின்பமே தந்து நாளும்
விக்கினம் வந்தி டாமல் விமலியே காத்தாள் வாயே (28)

மஞ்சப்பா வாடை கட்டி மாதர்கள் பூவில் நின்று
பஞ்சின்மேல் நடப்போ ருக்குப் பாதநோ காது போல
அஞ்சலென் றுதரித்து அன்னவர்க் கனல்தாக் காமல்
செஞ்சா ணத்தாள் நீயுஞ் சீக்கிரங் காத்தாள் வாயே (29)

எம்மதக் கொள்கை யோரு மெவ்விதச் செய்கை யோருஞ்
செம்மையாய் வந்துன் பாதச் சேவடி பணிந்த பேர்க்குத்
தின்மையொன் றணுகி டாமல் தீவினை வந்தி டாமல்
நன்மையே தந்து நாளும் காரணீ காத்தாள் வாயே (30)

கந்தமா மலர்கள் சூடிக் கடகங் கணங்கள் பூண்டு
பந்துவர்க் கத்தோர் சூழப் பக்கவாத் தியங்க ளோடு
சந்தனக் குடமெ டுத்துன் தாள்தனிற் சாத்து தற்கு
வந்திடு மடியார்க்கெல்லாம்வரமது கொடுத்தாள்வாயே (31)

கோவுள மன்னர் பார்க்கக் குடிகளைக் குடியில் வாழுஞ்
சேல்விழி மாதர் பார்க்கத் திரண்டதோள் வீரர் தாமும்
மாலது கொண்டு வந்துன் மலர்ப்பதங் காண வேண்டிப்
பால்குடமெடுப்போர்க்கெல்லாப்பாக்யமுந்தந்தாள்வாயே( )

புண்ணிய நதிநீ ராடி பூதிசந் தனம ணிந்து
கண்ணிய மாக நல்ல கடைவீதி சுற்றி மேலாஞ்
சன்னிதி நேரில் வந்துன் தாள் தனைப் போற்ற வேண்டிச்
சொன்னம்பன் னீர்கொ ணர்ந்த தாபரைக்காத்தாள்வாயே

காலனை யுதைத்துக் காத்த கண்ணுதல் வீற்றி ருக்கும்
ஆலயந் தொழுக வென்று அறைந்தன ளவ்வை முன்னஞ்
சாலவும் நன்றென் றுன்னைச் சார்ந்தடிபணிந்தோக்தாயே
சீலமா மிரசை வாழுஞ் சிற்பரீ காத்தாள் வாயே (34)

காலைமா லையினு முச்சிக் காலமுங் கருதி நித்தம்
ஆலயம் வந்து உன்னை யன்புடன் பணிந்து போற்றிச்
சூலைநோய் குட்டம் போக்கிச் சூழுறும் வினையும்நீக்கிச்
சோலைசூ ழிரசை வாழுஞ் சோதியே காத்தாள் வாயே (35)

மதியுளோர் செய்து வைத்த மடந்தடங் கோவில் கூபம்
நதிநிறை தடாகஞ் சோலை நறைமிகு பூந்தோட் டங்கள்
துதிபெறு மிரசை யுள்ள தொல்குடிப் பிறந்தோ ரெல்லாம்
சதிருடன் வாழ்க நாளுஞ் சத்தியே காத்தாள் வாயே (36)

துடியிடை யாளே துய்ய சோதிசுந் தரியே தாயே
கடிமலர் கொண்டு வந்துன்கழல்பணிந் தோர்க் கென்றும்
மடிமிடி மடமை நீக்கி மற்றுள் துன்பம் போக்கி
அடியரோ டென்னைச் சேர்த்து ஆனந்தி காத்தாள்வாயே()

அநித்திய வாழ்வை நம்பி யகங்காரங் கொண்டு பேசு
மனுச்செய லொன்று மில்லை மகமாயி உன்மீ துள்ள
பனுவலைப் பாடும் பாலர் பாலியர் விருத்தர் நாவில்
அநுமதி யாக நின்று அம்பிகே காத்தாள்வாயே (38)

மலைவளஞ் சிறந்த நாடு மழைமிகப் பொழியு நாடு
கலைகள்கற் றோர்கள் கற்போர் களிப்புடன் வாழும் நாடு
சிலைமதன் புகழு கின்ற சிறப்புள புருடர் வாழும்
நிலையுள இரசை நாட்டை நிரந்தரீ காத்தாள் வாயே (39)

பஞ்சணீர் கொண்டு வந்துன் மலரடி விளக்குகின்ற
பஞ்சின்மெல் லடிய ரான பகர்கிளி மொழியன் னாரை
அஞ்சலென் றாத ரித்து அவரவர் வேண்டுஞ் செல்வம்
மஞ்சுசூ ழிரசை வாழ மகமாயி கொடுத்தாள் வாயே (40)

பக்தர்க ளான பேர்கள் பற்பல வேடம் பூண்டு
நெக்குநெக் குருகி யுள்ளம் நிலைதடு மாறு வண்ணம்
அக்கினிச் சட்டிகொண்டு ஆடிய அடியார்க் கெல்லாம்
முக்கிய மாக நின்று முதல்வினீ காத்தாள் வாயே (41)

படியுடை யரசர் போற்றும் [illegible] சிறந்த நித்தம்
வடிவுடை யம்மை யுன்னை [illegible] வந்தடி பணியும் நல்ல
அடியவர்வேண்டுஞ் செல்வம் அன்புடன் கொடுக்கவேண்டும்
கொடிகொடை சுருட்டிகொண்ட குமரரைக்காத்தாள்வாயே

1925:41 4
நூலகம்
18/9/66

ஆசாரமுள்ள செல்வன் அன்பினைச் செலுத்து மன்பன்
காசாசை யில்லா வல்லன் கல்வியிற் சிந்தை நல்லன்
தாசரைப் போற்று மெய்யன் தன்மையிற் சிறந்த துய்யன்
பூசாரி குடிகடன்னைப் புராதனி காத்தாள்வாயே (43)

ஆழிசூ ழுலகி லுள்ள அனைத்தையுங்காக்க ரெண்டு
நாழிநெற் கொண்டு கையில் நல்லறஞ் செய்த தாயே
காளிகங் காளி சூரி கபாலிபெண் டோளி வீரி
ஊளியக் குடிகடன்னை உண்மையாய்க் காத்தாள்வாயே ()

சென்னெல்செங் கரும்புசெந்தேன் செழித்திடுமிரசைவாழும்
உன்னடி யார்கடன்னை யுதாசினம் பேசுகின்ற
வன்னெஞ்ச முடையோர் தங்கள்வாளை வாங்கவேண்டும்
நன்னெஞ்ச முடையோர் தம்மை நாரணி காத்தாள்வாயே

கட்டடங் காத பேரைக் காலபா சத்தாற் கட்டி
வெட்டிநிர்த் தூளி பண்ணி வேராறுத் திடடன்னோரைச்
சுட்டுமே சாம்ப லாக்கித் தூற்றிடு காடு தன்னில்
அட்டியில் லாது நாளும் அன்பரைக் காத்தாள்வாயே (46)

கற்பழி யாத மாதர் கற்பழிந் தார்க ளென்று
கற்பனை யான வார்த்தை கட்டியே கலகஞ் செய்யும்
அற்பரை யழித்தன்னோரை யனலிடு செக்கிற்போட்டுத்
தற்பல மாகத் தேய்த்துத் தூயரைக்காத்தாள் வாயே (47)

மனைவிதன் மக்களுக்கு மற்றுள சுற்றத் தார்க்குந்
தினந்தின மலைந்து மெத்தத் திரவியந் தேட வேண்டி
உனதிரு வடிபோற் றாது உள்ளன்பி லாதி ருந்த
தனயனைப் பாது காத்துத் தயாபரி காத்தாள் வாயே (48)

நல்லர்செய் காரி யங்கள் நல்லுல கத்தில் நல்ல
கல்லின்மே லெழுத்துப் போலக்கா ணுமென் றவ்வைமுன்
சொல்லிய படியால் தாயே சொற்றவ றாத தூய [னைஞ்
நல்லவர் தன்னை நாளும் நாரணி காத்தாள் வாயே (49)

முடியுடை யரச ரெல்லா முடிவினிற் பார்க்கும் போது
பிடியொரு சாம்பலான பெருமையைக் கண்டு பின்னும்
படிதனில் வாழ்வை நம்பிப் பற்றுன்மேல் வைத்தி டாத
அடிதனை மெய்யாய்ச் சார்ந்த அன்பரைக் காத்தாள்வாயே

சந்தையின் கூட்டம் போன்ற சகத்தினை மெய்யென் றெண்
பந்தமாம் வலையிற் சிக்கி பாவமே புரிந்து நாளுஞ் [ணி
சிந்தையி லுந்தன் பாத தெரிசனஞ் செய்தி டாத
மைந்தனை மனம்பொ றுத்து மகிழ்வுடன் காத்தாள் வாயே

களவுகட் காமம் பொய்யாங் கடுங்கொலையைந் தும்நீக்கி
அளவொடு நிற்கச் செய்யும் அம்பிகை மாரி முத்தே
வளமிகு மில்லறத்தை வாகுடன் நடத்தி யெந்தன்
உளமகிழ் மக்களீய்ந்து உண்மையாய்க் காத்தாள் வாயே()

குருவுப தேசம் பெற்றுக் குவலயந் தன்னில் நாளுந்
தருமமே நிசமென் றெண்ணி சதாவும்ம தருமஞ் செய்யும்
அருமைநம் படியா ருக்கு அருளொடு பொருளுந் தந்து
பெருமையே தந்துநாளும் பிராட்டிநீ காத்தாள்வாயே (53)

தொட்டிய நாய்க்கர் தச்சர் சோனகர் தாய்மை யுள்ள
செட்டியார் வேளாள சேர்வை சிறந்தவல் லம்பர் யாரும்
அட்டியில் லாம லுன்ற னடிதனைப் பணிய வந்து
பட்டியில் வாழும் நல்ல பத்தரைக் காத்தாள் வாயே (54)

கும்பிக்குக் கூழில் லாமற் கூலிக்குக் கதிரறுத்து
நப்பிக்கை யிலாத லைந்த நாய்கள்நா யகம்போ லாமா
தம்பிக்கை யானையாபோ தோன்றகண் டேவியென் னும்
அப்பிசே உன்னைப் பாடு மடியரைக் காத்தாள் வாயே (55)

மண்டலந் தன்னில் வாழும் மாதரிற் கற்பு ளார்கள்
கொண்டவ னன்றி மற்றைக் கோமகன் வந்த போதுங்
கண்டுமே மனதில் யாதுங் களிப்பினை யடைய மாட்டார்
அண்டர்கள் புகழுந் தாயே அவர்களைக் காத்தாள் வாயே( )

அற்பர்க ளறிவில் லாமூ லகங்கதைகள் பேசு வார்கள்
சிற்பன விவேக முன்னோர் வீரமே பேசமாட்டார்
கற்புள மாதர் தங்கள் கணவனைக் கருதிப் போற்றும்
நற்புகழ் பெற்ற நந்த நாயகி காத்தாள் வாயே (57)

அடுத்தவிட் டார்களோடு அன்புட னிருந்திடாமற்
கெடுத்திட வேண்டு மென்று கிஞ்சிற்று நினைப்போர் தம்மை
உடுத்த ஆடையுமி லாது உண்டிடச் சோறி லாது
நடுத்தெரு வலையச் செய்யும் நாரணி எனைக்காத் தாளே ( )

உடம்புயிர்க் குடம்பை புட்போ லோடுதல் கண்டு மிந்தச்
சடந்தனை மெய்யென் றெண்ணிச் சற்கரு மங்கள் செய்யா
மடமையென் மடமை நீக்கி மாநிலந் தன்னில் நல்ல
இடம்பொரு ளெல்லாந் தந்து ஏழையைக் காத்தாள் வாயே

கல்வியி லுயர்ந்தோர் மாட்டே காசினி யென்றூர் முன்னம்
நல்லபேர் பெற்ற பிள்ளை நல்லகா ரியமே செய்வர்
அல்லபேர் பெற்ற பிள்ளை அல்லவை செய்வர் கண்டீர்
புல்லரைத் தொலைத்து நாளும் பூரணி காத்தாள் வாயே (60)

கற்றறிந் தோரை விட்டுக் கல்லாத மூடர் நேசம்
பற்றிய பதடி யான பகுத்தறி வில்லா நாயை
யெற்றிடு அவர்க டன்னை யென்றைக்கும் நல்லோர் நேச
முற்றவர் தன்னை நாளு முண்மையாய்க் காத்தாள் வாயே( )

பெற்றதாய் பிள்ளை பெண்டிர் பிதாவுக்குச் சோறி டாதார்
மற்றவர் தங்களுக்கு மனதுட னுணவு தாரார்
கற்றவ ரறிந்து சொன்ன கதைதனைக் கருதிப் பார்க்கும்
நற்றவர் தன்னை நாளும் நாரணி காத்தாள் வாயே (62)

தீதாக வழக்குப் பேசுந் தீயர்தம் மனையில் நாளும்
வேதாளஞ் சேரு மென்றும் வெள்ளெருக் கலருமென்றும்
பாதாள மூலி கேட்டைப் பைந்நாகம் வாழுமென்றும்
மூதாட்டி சொன்ன நீதி மொழிதனைக் காப்பாய் தாயே ( )

இல்லங்க டோறுஞ் சென்று இறந்துணு மிழிவி னோர்பின்
வல்லமை யாலே யாங்கள் வாழ்ந்தவ ரென்று பேசும்
புல்லரைத் தொலைத்து நாளும் புகழுடன் வாழு கின்ற
நல்லவர் தங்க டன்னை நலமுடன் காத்தாள் வாயே (64)

குச்சுவீ டுகளு மின்றிக் கோடியில் நின்ற சில்லோர்
மச்சுவீ டுகளுண் டான மகிழ்ச்சியால் மதிப்புள்ளோர்முன்
அச்சமில் லாமல் நின்று அசம்பாவி தங்கள் பேசும்
கொச்சைமக் களைநீகொன்று குலத்தரைக் காத்தாள் வாயே

நன்றிசெய் தோரைக் கொன்ற நல்லறி வில்லாப் பேரை
கொன்றவ ருயிரை வாங்கிக் குடலைநன் மாலை போட்டுத்
தின்றுமே தீய்க்க வேண்டுந் தேவியே மாரி முத்தே
என்றும்நீ நல்லோர் தம்மை யின்பமாய்க் காத்தாள் வாயே

அடுத்தவர் மனையை மெள்ள அபகரித் திட்டுவாழ
படுத்தடி பேசு கின்ற பாதகர் தங்களுக்குக்
கடுத்தநோய் விட்டன் னோரைக் காலனார்க்கேகச்செய்வாய்
வடித்தமிழ்ச் சங்க மேவும் வாலையெந் தனைக்காப்பாயே(97

காடுமே டுகளுஞ் சுற்றிக் கஞ்சியில் லாதலைந்து
நாடுவந் தடைந்த போது நாரணி கிருபை யாலே
மாடுபொன் வீடுண்டான மகிழ்ச்சியால் மதிப்புள்ளோரைச்
சூடுபோல் சாடை பேசுந் துட்டரைத் தொலைப்பாய்தாயே

பத்தர்பத் தினியரான பரமஞா னியர்கள் தன்னை
சித்தமே கலங்கச் செய்த சிதடர்கள் சீரி லாதார்
அத்தமும் வாழ்வெ லாமோ ராண்டினில் மாளச் செய்து
சத்திய மாந்தர் தன்னைச் சற்குணீ காத்தாள் வாயே (59)

மடந்தட மாலை யங்கண் மணமிகு பூந்தோட் டங்கள்
இடந்தனி லெவர்க ளேனு மிடுக்கண்கள் செய்வோர் தங்க
ளிடந்தனை யிழந்து முன்னே ரீட்டிய பொருளிழந்து
சடந்தனை யிழக்கச் செய்வாய் தயாபரி மாரி முத்தே (70)

வறிஞரா யிருந்த பேர்க்கு வாழ்வது வந்த போது
பெரியரைப் பேணிப் பேசார் பெற்றதாய் தந்தை பேணார்
அரியகா ரியங்கள் செய்யா ரவனியி லழிந்து போகுஞ்
சிறியகா ரியமே செய்யுஞ் சிறியரைச் சிதைப்பாய் தாயே ( )

முந்திரித் துட்டில் லாத மூடர்க்குக் காணிசேரில்
இந்திர னாக வெண்ணி யிறுமாப்புக் கொள்ளு மாந்தர்
தந்திர மிழந்து செல்வந் தன்னையு மிழந்து நொந்து
வந்தடி பணிந்து நின்ற வம்பரைக் காத்தாள் வாயே (72)

உடாமலுன் னுமற் காந்தனுந் தர்கள் பொருளைக் கொண்டு
கெடாதநல் லறஞ்செய் யார்கள் இளைஞருக் குதவி டார்கள்
கொடாதுவைத் திழப்ப ரென்று கூறினர் புலவர் முன்னம்
அடாதுசெய் தழிவ ரென்று மன்பரைக் காத்தாள் வாயே

கறையுள மகளிர் சேயங்கண்டுமே பொருள் தேய்ந்தகக்
குறைபல வியாதி கொண்டு குவலயத் தலைந்து நின்ற
நிறையிலா நெஞ்ச முள்ளோர் நீசரில் நீச ரென்று
மறையது பகருந் தாயே மைந்தனைக் காத்தாள் வாயே (74)

அன்னியர் வழக்கை நன்றாய் ஆராய்ந்து பேசி வந்த
தன்வழக் கதனில் ஞாயந் தள்ளியே தட்டிப் பேசும்
வன்மன முடையோர் தங்கள் வாளுனைப் போக்க வேண்டும்
பன்னிய முதல்வி யென்னைப் பாதுகாத் தாளுவாயே (75

கல்விகல் லாதமாந்தர் களர்நிலம் போலதாகுங்
கல்விகற் றோர்கள் நல்ல காஷ்மீர கண்டம் போலாம்
நல்லவர் செய்கார் யங்கள் ஞாயிறு திங்கள் மட்டும்
அல்லவர் செய்கை யன்றே யழிப்பதுன் செயலே அம்மா

ராஜரா ஜெல்வ மிக்கு ரகசிய மொருவின் னைப்பங்
தேசமே புகழு நேசர் திருவிழாச் செய்யும் போது
கூசாமல் வந்து நின்று குடிகள் முன் வாது பேசும்
ஆசார மில்லா நீச ரகந்தையை யறுப்பாய் தாயே (77)

விற்பனர் போல்நடித்து வீரர்போல் வேடம் பூண்டு
அற்பர்களறிவில் லாமலங்கங்கு சென்று நாளுங்
கற்பனை யான வார்த்தை கட்டியே கலகஞ் செய்யும்
அற்பரை அழித்து யென்று மடியரைக் காத்தாள் வாயே()

அடியரை யடிமை யென்று அனீதமாய்ப் பேசிநாளுங்
குடிகளை யொன்றோ டொன்று கூடாத வண்ணஞ் செய்யுந்
தடியரைத் தண்டங் கொண்டு தண்டிக்க வேண்டுந் தாயே
செடில்மிகக் குத்தி யாடுஞ் சேயரைக் காத்தாள் வாயே ()

கல்விகல் லாத மாந்தர் கற்றவர் தங்கள் முன்னே
வல்லமை பேசு கின்ற வண்மையைப் பார்க்கும் போது
வல்லியம் தனக்கு முன்னே வம்புசெய் புல்வாய் போலாம்
செல்வர்கள் தன்னை நாளுஞ் சீருடன் காத்தாள் வாயே ()

கொழுப்புனை கொண்டு வாழுங் குடிகள் முன் வாது கூறி
சமுமரங் கொண்டு வந்து கலகமே செய்ய வந்த
வழுவுள மள்ள செல்லாம் வந்தடி பணியச் செய்த
செழுமைசே ரிரசை வாழுஞ் சிற்பரி காத்தாள் வாயே (81)

குருவுப தேசங் கேளார் கூகைபோற் கூவு மாந்தர்
திருநீறை யணிய மாட்டார் திருநாமஞ் செபிக்க மாட்டார்
மருவிலா மலரெ டுத்து மாதேவி பாதம் போற்றார்
அறிவிலா அசடர் தங்க ளகந்தையை யறுத்தாள் வாயே()

வையகம் புகழும் நல்ல வணிகர்மண் டபத்தில் வந்த
பையர வணிந்தோன் றேவி பார்வதி யுந்த னுக்குச்
செய்யசந் தனம்பன் னீருஞ் செம்மலர்ப் பட்டுஞ் சாத்தித்
துய்யநற் கனிக ளீயுந் தொண்டரைக் காத்தாள் வாயே(83)

குணமெனுங் குன்றில் வாழுங் கோமுட்டி வைசியர் செய்
கணமண்ட பத்தில் வந்த கன்னிகா மேஸ்வரிக்குப்
பணம்பரி வட்டம் பன்னீர் பலமலர்க் கனிதேங்காயு
மணசந்த னங்கள் சாத்தி மகிழ்வரைக் காத்தாள் வாயே ()

கடைவீதிக் காரர் செய்த கனத்தமண் டபத்தில் வந்த
விடையனூர் விமலன் றேவி வித்தகி யுந்த னுக்குத்
தொடையுள மாலை சாத்தித் துய்யதீங் கனிவர்க் கங்கள்
அடைவுடன் கொடுத்த னுப்பு மன்பரைக் காத்தாள்வாயே

முத்துரா மலிங்க வள்ளல் முன்செய்மண் டபத்தில் வந்த
சத்துருசங் காரத் தாய்க்குந் தன்மையா மடிய வர்க்குந்
நித்திய தேங்காய்சுண்டல் செம்மலர்ப் பொன்னும் பட்டும்
நத்தியே வேண்டி நல்கும் நண்பரைக் காத்தாள் வாயே(86)

செட்டியர் தெலுங்கர் செய்த சிறந்தமண் டபத்தில்வந்த
கட்டங் காத காளி கங்காளி யுந்தனுக்கு
பட்டிசந் தனம்பொன் மாலை பரிவட்டம் பலவுஞ் சாத்தி
அட்டியில் லாதனுப்பு மன்பரைக் காத்தாள் வாயே (87)

நாராய ணபிள்ளை செய்த நல்லமண் டபத்தில் வந்த
காராய ணியு னக்கு நன்மலர்ப் பொன்னுஞ் சாத்தும்
பாராளர் வாழ்த்த மேலாம் பழவகை தேங்காய் யாவும்
ஏராள மாக வீயு மின்பரைக் காத்தாள் வாயே (88)

சிவசங் கரவேள் செய்த சிறந்தமண் டபத்தில் வந்த
தவநிறை யடிய வர்க்குந் தயாபரி யுந்த னுக்கும்
நவரச மிட்டாய் லட்டு நன்மலர் மாலை யாவுங்
குவலயம் போற்ற நல்குங் குணத்தரைக் காத்தாள்வாயே ()

தெய்வகம் மியர்கள் செய்கை தேர்ந்தமண் டபத்தில் வந்த
வையகம் புகழும் நல்ல வாலைசுந் தரியு னக்குச்
செய்பொனுச்சிறப்புச்செய் துசெங்கனிதேங்காய்செம்பொன்
கைதனிற் கொடுத்தனுப்புங் கர்த்தரைக் காத்தாள்வாயே ()

நாவிதன் மாடம் வந்த நாரணி யுந்தனுக்குப்
பாவித மலர்கள் சாத்திப் பரிமளப் பனிநீர் கொட்டி
தேவிசாம் பவியே என்று திருநாமம் பலவுஞ் சொல்லிச்
சேவித்து வாழ்த்தும் நல்ல சேயரைக் காத்தாள் வாயே ()

மண்ணுளோர் போற்றும் ஞான மாதங்கி யுன்றனுக்கு
வண்ணார்கள் கூட்டங் கூடி வாழைதோ ரணங்கள் கட்டி
எண்ணெண்ணு வினியோ கங்கள் இன்பமாய்ச் செய்தனுப்புந்
திண்ணிய மான பேரைத் தேவியே காத்தாள் வாயே (92)

அடியவர் புகழும் நல்ல அடைக்கன்மண் டபத்தில் வந்த
வடிவுள அம்மை பார்க்க வாளைமத் தாப்புக் குண்டு
கடிகமழ் மாலை தேங்காய் கனிகள்பல் வினியோ கங்கள்
படியுளோர் தமக்கு நல்கும் பண்பரைக் காத்தாள் வாயே (

துந்துபி வருஷந் தன்னிற் சொல்லும்பங் குனி மாதம்
அந்தமா யன்பா யானும் அறிவினி லறிந்த மட்டுஞ்
சந்தப்பா மாலை நூலைச் சாற்றினேன் சபையோர் கேட்க
வந்தனஞ் செய்தேன் தாயே மைந்தனைக் காத்தாள் வாயே

எரிசை நந்தம் வாழும் ஈஸ்வரீ உந்தன்மீது
சீரிசை தெரிந்த மட்டுஞ் செப்பினேன் எனக்குநல்ல
காரிய காரணைதிகைகூடி வாமெய்ஞ் ஞானச்
சீரிய னாகச் செய்து தேவியே காத்தாள் வாயே (95)

நீடிய ஆயுள் சேரும் நினைத்திடும் பொருள்கை கூடும்
வீடியல் வழிய தாகும் வெற்றியுண் டாகும் நித்தம்
பாடினோர் கேட்போர்க் கெல்லாம் பத்தியு மறிவு முண்டாம்
மேடைசூழ் நந்த மேவு மாரிதாள் மேவு வோர்க்கே (96)

வீரப்ப வள்ளல் பெற்ற வீரியப் பெருமா ளென்போன்
மாரியம் மன்மேற் சொன்ன மோகவி நூறுங் கற்றுப்
பாரினிற் படித்த பேர்கள் பரனருள் மிகவடைந்து
காரிய சித்தியோடு கைலையும் பெறுவார் மாதோ (97)

பங்கயத் தோளும் வாழி பாய்விடை யூர்தி வாழி
சங்குகைக் கொண்டோன் வாழி சங்கரன் மைந்தர் வாழி
செந்திரு வுமையும் வாழி சீர்தரு வாணி வாழி
சந்திர சூரியர் வாழி சராசர மனைத்தும் வாழி (98)

நல்லிசைப் புலவர் வாழி நலமிகு மடியார் வாழி
கல்விகற் றோர்கள் வாழி கற்புள மாதர் வாழி
சொல்லொணாத் தவத்தோர் வாழி தோள்வலி வீரர் வாழி
செல்வர்கள் வாழி நல்ல சிவஞானி வாழி வாழி (99)

இந்திர நகர்க்கொப் பான எரிசை நத்தம் வாழும்
மந்திர மறையோர் மன்னர் வணிகர்வே ளாளர் வாழி
சங்கீத பஜனை வாழி சஜ்ஜன சபைகள் வாழி
மங்கள கோல முள்ள மகமாயி வாழிவாழி (100)

ஸ்ரீ மாரியம்மன் தோத்திரப் பாமாலை

முற்றிற்று

தமிழ்நாடு அரசு ... சென்னை 600 008
181966

உ

பரமபதி துணை.

வைத்திய வாத மாந்திரீக ஞானயோக

முதலிய சாஸ்திரங்களில்

மகா வல்ல நிபுணர்களாகிய பதினெண் சித்தர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# பச்சிலை மூலிகை உலோக மருந்து

வகைகளின்

## பரிபாஷை வெளிப்படைப்

# பெயரகராதி.

---

இதை வைத்திய வாத மாந்திரீக ஞானயோக ஆராய்ச்சியுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் பார்க்கவேண்டுவது அவசியமே. கூடிய சீக்கிரம் வெளிவரும். வேண்டுவோர் கீழ்கண்ட நமது விலாசத்துக்கு எழுதி வீ. பீ. மூலமாயும் நேரிலும் சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம் விலை ரூ. 6—0—0 சொற்ப காப்பிகளே தயாரிப்பதால் புத்தகத்திற்கு முந்துங்கள்.

இங்ஙனம்.

கு. இராமசாமிக் கோன்
புக்ஷாப் புதுமண்டபம்
மதுரை.

உ

பரமபதி துணை.

வைத்திய வாத மாந்திரீக ஞானயோக

முதலிய சாஸ்திரங்களில்

மகா வல்ல நிபுணர்களாகிய பதினெண் சித்தர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# பச்சிலை மூலிகை உலோக மருந்து

வகைகளின்

## பரிபாஷை வெளிப்படைப்

# பெயரகராதி.

---

இதைவைத்திய வாத மாந்திரீக ஞானயோக ஆராய்ச்சி யுள்ளநீங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் பார்க்கவேண்டுவது அவசியமே. கூடிய சீக்கிரம் வெளிவரும். வேண்டுவோர் கீழ்கண்ட எமதுவிலாசத்துக்கு எழுதி வீ. பீ. மூலமாயும் நேரிலும் சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூ. 6—0—0 சொற்ப காப்பிகளே தயாரிப்பதால் புத்தகத்திற்கு முந்துங்கள்.

இங்ஙனம்.

கு. இராமசாமிக் கோன்

புஸ்தகப் புதுமண்டபம்

மதுரை